மலர் 1 இதழ் 2 அக்டோபர், 2016 ISSN : 2454-3993

# பெரியபுராணத்தில் கலைகள்

நா. அமிர்தக்கொடி
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

கலை, வாழ்க்கையை இன்பமயமாக்குகிறது. அழகுணர்ச்சியை வெளிப்படுத்துவதே கலையாகும். எப்பொருளிலும் செயலிலும் கவர்ச்சியைத் தோற்றுவிக்கும் அழகு வேலைப்பாடுகளைக் கலை என்பது பொருத்தமாகிறது. மண்ணிலம் விண்ணிலும் எப்பொருளையும் எங்கும் எப்பொழுதும் பிறர் விரும்பும் வண்ணம் செய்வதெல்லாம் கலையின்பாற்படும். மட்பாண்டம் செய்பவர்கூட அவற்றில் அழகிய பூப்போன்றும் நேர், வகைக் கொடுகளையும் பதித்து அழகுபடுத்துகின்றனர். மங்கையரிடும் மாக்கோலங்கள் காலைக் கதிரவனோடு போட்டி போட்டுக் கலைச்சிரிப்பை உதிர்க்கின்றன. எனவே, அன்றாடம் உண்பது முதல் உறங்குவது வரை வாழ்க்கை முழுவதுமே கலை எனப்படும். "கலை அறுபத்து நான்கு" என இலக்கியங்கள் கூறுகின்றன. நுண்கலைகள் அழகுயணர்வு, மனப்போக்கு, பண்பு, நாகரிகம், சமயம் முதலியவற்றை வெளிப்படுத்துவன. மண்ணிற்கு வெளிப்படையாகத் தோற்றமளிப்பது பருக்கலை எனப்படும். இவ்விரு கலைகளும் சமுதாயத்தில் ஒன்றி, உயிரிற் கலந்தொருவதைப் பெரியபுராணமெங்கும் பரக்கக் காணமுடிகிறது. எதையும் சாதாரணமாகக் காண்பது வேறு, கலைக் கண்ணால் கண்பது வேறு. கலைக்கண்ணோட்டத்தில் எவ்வித மாசுமின்றித் தூய்மையான இன்பம் ஒன்றே மிளிர்கிறது. இத்தகையோரே கலைக்கண்ணாளர் என்றும் கலைஞர் என்றும் அழைக்கப்படுவர். சேக்கழார் சிறந்த கலைக்கண்ணாளர் என்பதை அவர் இயற்றிய காப்பியமாகிய திருத்தொண்டர் புராணமே நிரூபிக்கின்றது. தேசிய இலக்கியம் எனப்படும் பெரியபுராணத்தில் கலை சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. அதில் ஆடல், பாடல், சிற்பம், கட்டடம், ஓவியம், கல்வி, கணித்தல், மருத்துவம், மனப்பயிற்ச்சி, சமையல், போர், சூது, முதவிய பன்னிரண்டு துறைகளிலும் கலை உயிரோட்டம் பெறுகிறது.

**ஆடற்கலை**

சோழநாட்டுத் திருவாரூர் ஆடற்கலைக்குப் புகழ் பெற்றதாகத் திகழ்ந்தது. அவ்வூரில் தேர்ச்சி பெற்ற நடனமாதர்

வாழ்ந்தனர். சுந்தரர் திருவாரூர்க்குச் சென்றபொழுது அவரை ஆடற் பெண்டிர் நடனமாடி வரவேற்றனர்.(பெரியபுராணம் பா.எ.265) எனவே பெரியபுராணம் காட்டும் சமுதாயத்தில் பெரியோர்களை நாட்டியமாடி வரவேற்றனர் என்றும், ஆடற்கலை சிறப்பாக மதிக்கப்பட்டதென்றும் விளங்குகின்றன. வேடர்கள் சேவற்கோழிகளையம், மயில்களையும் முருகவேலுக்குக் காணிக்கையாகக் கொடுத்தனர். மணிகளைத் தோரணங்களாகக் கட்டி, கடப்ப மலர் எனும்ட கதம்பமலர் மாலைகளைத் தொங்கவிட்டனர். வேல் முருகனின் புகழ்பாடி ஏழு குறப்பெண்டிர் சேர்ந்து கைகோத்துக் குரவைக் கூத்தாடினர். (பெரியபுராணம்.பா.எ.660)

திண்ணனிண் வில் விழா ஏழு நாட்களுக்குக் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு நாளும் பலவகை ஆடல்கள் நிகழ்த்தப்பெற்றன. வேடரின் வரிக்கூத்து, வேடிச்சியரின் துணங்கைக் கூத்து, சூரரமகளிரின் ஆட்டங்கள் முதலியன வில் விழாவில் இடம் பெற்றன. உச்சிப்பொழுதில் மங்கல வாழ்த்திசைக்க மங்கல வாத்தியங்கள் ஆர்த்தன. காரைக்காலம்மையார் பேய்வடிவம் கொண்டபொழுது வானிலிருந்து மலர் மழை பொழிந்தது. தேவ துந்துபிகள் தாமாக முழங்கின. தேவர்களும் முனிவர்களும் குலாவி மகிழ்தனர். சிவ கணங்கள் மகிழ்ச்சியால் குணலைக் கூத்தாடின. வரிக்கூத்தென்பது குறவர் குறிஞ்சிப் பண்பாடி ஆடிய ஆட்டமாகும். துணங்கைக்கூத்து என்பது குறப்பெண்டிர் வெற்றிக் களத்தில் மகிழ்ச்சியாகப் பாடியாடிய ஆட்டம் எனப்படும். இவை பெரியபராண சமூகத்தில் இடம் பெற்றிருந்தன.

**பாடற்கலை**

இசைக்கு மயங்காதார் யாருமிலர். கேட்பவர்களை இசைய வைப்பதால் இசை என்றாகிற்று. இசை இன்றேல் இன்பமில்லை. எனவேதான் இறைவனும் இசை வடிவமாகவும் இருக்கின்றான். இயற்கையும், இசையில் கலந்துள்ளது. தமிழும் இசையும் பிரிக்க இயலாதவை. மதுரையில் இசைக்கலைஞன் திண்ணன் கன்னி வேட்டைக்குப் புறப்பட்ட பொழுது முன்னால் கொம்புகள் ஊதப்பட்டன. அதனையடுத்துச் சிறு பறைகள் முழங்கப்பட்டன. பும்பைகள் கொட்டப்பட்டன. வேடர்கள் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர். இவ்வாறு பல வகை ஓசைகளும் சேர்ந்து அங்கே இசை பெருகிற்று. எனவே, பெரியபுராணம் காட்டும் சமூகத்தில் வேட்டையாடியபோது இசைக்கலை போற்றப்பட்டதென அறியமுடிகின்றது. குலோத்துங்க சோழன் தேவியர்களில் ஒருவர் ஏழிசை வல்லபியென்னும் பட்டப் பெயரையுடையவர். குலோத்துங்கச் சோழன் இசையிடத்துப் பெற்றிருந்த பேரன் பால் ஏழிசை வல்லபியென்னும் இசை விருது பெற்ற மங்கையை மணந்து வாழ்ந்தான். என்று கூறுவர்.(பெரியபுராணம்.பா.எ.721)

திருஞானசம்பந்தர் மழலைப் பருவமாகிய மூன்றாம் வயதிலேயே இறைவனைப் பாடத்தொடங்கினர். பெரியபுராணம் மதுரவாயில், ஏழிசையுந் தழைத்தோங்க இன்னிசை வண்டமிழ்ப் பதிகமெய்தப்பாடி என்கிறது. அனைத்துயிர்களின் எலும்பும் உருகும் வண்ணம் குழலில் இன்னோசை முரலுமாறும் எழுமாறும் நிலைத்து நிற்குமாறும் செய்து இசைமுறைப்படி விரல்களை அசைத்து ஓசையெழுப்பினார். மாறி வரும் வண்ணம் குறஞ்சிப் பண்ணின் பின்னே முல்லைப் பண்ணை எழுப்பி, அதன்பின் பாலைப் பண்ணாகிய தாரம், உழையைப் பொருத்தி இனிய பண்ணைக் கொடிப்பாலையில் நிறுத்தி ஊதினார் மூவகைச் சுருதிகளாகிய மெலி, சமன், வலி எனும் மும்முறைகளில் துளைகளை அடைத்து,

விரல்களை அசைத்துக் குழலை வாயில் பொருத்தி இசைத்தார். ஆனாயர் இசை நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பெருவண்ணம், இடை வண்ணம். வுனப்பு என்ற இசை வகைகளை இனிய நாதத்தில் அமைத்தார்.(பெரியபுராணம்.பா.எ.937-948) அவர் தாளம் என்ற பாணி, இசைதூக்கு, நடை முதலிய கதிகளுடன் குழலோசையை எழுப்பினார். ஆகவே அன்றைய சூழலில் மக்கள் இறைவனை இசையோடு பாடித்துதித்தனர் என அறியமுடிகிறது.

**சிற்பக் கலை**

ஓவியக் கலையிலிருந்து வளர்ந்து சிற்பக்கலை. பெரும் பகுதி சிற்ப வேலைகளை கற்பாறைகள், கற்றூண்களிலும், சிறுபகுதி மரங்களிலும், மண்ணிலும் செய்தனர். கோயில்களில் வடிக்கப்பட்ட சிற்பங்கள் இன்றும் நிலைத்திருக்கின்றன. சிவாலயங்களில் லிங்க வடிவிலிருந்தே சிற்பக்கலை உருவெடுத்திருக்க வாய்புண்டு. அதன்பின் இறைவனின் நடனம், மற்றும் திருவிளையாடல்கள் முதலியவை சிற்பங்களாகச் செதுக்கப்பட்டு சிற்பக்கலை வளர்ச்சி பெற்றது. ஆலயங்களிலும் அரண்மனைகளிலும், செல்வ மாளிகைகளிலும் பொதுவிடங்கள், மன்றங்கள் முதலியவற்றிலும் சிற்பக்கலை உருவெடுக்கலாயிற்று. குங்குலியக் கலய றாயனார் திருப்பனந்தாளில் சாய்ந்திருந்த சிவ லிங்கத்தை நிமிர்த்தி வழிபட்டார். திருப்புன்கூரில் நந்தனார் சிவலிங்கத்தை வழிபட்ட பொழுது, இலிங்கத்தின் முன்பாகவுள்ள நந்தியின் சிற்பம் மறைத்து இடையூறு செய்தது. இவற்றினின்றும் அன்றைய சமூகத்தில் மக்கள் இறைவனைச் சிற்பங்களாகச் செய்து வழிபட்டனர் என விளங்குகிறது. (பெரியபுராணம்.பா.எ.858, 1057)

சிவனடியார்கள் தம்மைமறந்து சிவலிங்க வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். கோயில்களில் தோன்றிய சிற்பக்கலை மன்னர், மக்கள் இருப்பிடங்கட்கும், பொதுவிடங்கட்கும் பரந்து வளர்ந்தது என்றும் சிற்பக்கலை கால இடைவெளியின்றிக் காலந்தோறும் படிப்படியாக வளர்ந்து உயர்நிலை பெற்றது என்றும் பெரியபுராணம் காட்டும் சமுதாயத்தில் உன்னத நிலையில் இருந்தது என்றும் புலனாகின்றது.

**கட்டடக் கலை**

பழம்பெரும் கோயில்கள், மாளிகைகள் முதலியவை கல், மண், கதை, சுட்டமண், என்ற செங்கற்களால் கட்டப்பட்டன. குட்டடங்களில் ஓவியம், சிற்பங்களை அமைத்து, வண்ணக் குழம்புகளைப் பூசி அழகு செய்தனர். காஞ்சி நகரில் மாளிகைகளுடைய மாடங்கள் செம்பொன்னாலும், கீழ்நிலைப்படிகள் நீலமணிகளாலும் சாளரங்கள் வைரங்களாலும் அமைக்கப் பெற்றிருந்தன. பல மணிகள் மின்னிக் கொண்டிருந்த அம்மாடங்கள் மீது சந்திரகாந்தக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. அதன் உச்சியில் மேகத்தை உராயும் கொடிகள் நாட்டப்பட்டிருந்தன. (பெரியபுராணம்.பா.எ.3320) மேற்சிகரங்கள் பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்டிருந்தன. சந்திரனின் ஒளிக் கதிர் பட்டாலே நீர் கசியும் தன்மையுடைய ஒளி பொருந்திய கற்கள் பெரியபுராணம் காட்டும் சமுதாயத்தின் கட்டடக்கலைக்குப் பயன்படுத்தப்பட்டன என்று அறியமுடிகின்றது.

திருக்கச்சூரில் எழுப்பட்ட ஆலயம் திருஆலக் கோயில் என்பதாகம் அச்சிவாலயத்தின் மதில் பொன்னால் செய்யப்பட்டிருந்தது. அது அன்றும் நிலைத்துள்ள சிதம்பர நடராசப் பெருமான் கோயிலின் தங்க ஒடுகளால் வேயப்பட்ட கோபுரத்தை நினைவுபடுத்துகிறது. பெரியபுராண சமுதாய மக்கள் கோயில் மதில்களைக்கூடத்

தங்கத்தால் எழுப்பிக் கட்டடக் கலையை வளர்த்துள்ள பாங்கினை அறிய முடிகிறது. தெய்வங்களுக்கு நாடு முழுவதிலும் கோயில்கள் கட்டப்பட்டன. அவற்றில் அழகுக் கலைகள் வளர்க்கப்பட்டன என உணர முடிகின்றது.

**ஓவியக்கலை**

நுண்கலைகளுள் தொன்மையானது ஓவியக்கலை. இது காண்பவரை வியப்பில் ஆழ்த்தித் தன் பக்கம் ஈர்க்கும் ஆற்றலுடையது. அப்பூதியடிகள் நாவுக்கரசரை வரவேற்பதற்கு தம் இல்லத்தைக் கோமயத்தால் மெழுகி, சுண்ணச்சாந்தாற் கோலமிட்டு விளக்கேற்றி உபசரித்தார். (பெரியபுராணம்.பா.எ.1821) ஆகவே இல்லங்களைக் கோலமிட்டு அழகு செய்யப்பட்டமையை அறியமுடிகின்றது. சம்மந்தரின் திருமணவிழாவிற்குத் திருப்பெருமண நல்லூரிலிருந்த வானுயர்ந்த மாடங்கள், மண்டபங்கள், மாளிகைகள் அலங்கரிக்கப்பட்டன. ஆவற்றில் எழில்மிகு ஓவியங்கள் எழுதப்பட்டிருந்தன. மங்கலக் கோலங்கள் வரையப்பட்டிருந்தன. எனவே ஓவியக் கலையும் பெரியபுராணச் சமூகத்தில் பகழ்பெற்று விளங்கியுள்ளமை புலனாகிறது.

**கல்விக் கலை**

கல்வி நுண்கலைகளுள் ஒன்று. இது தொன்றுதொட்டு இயல்பாகவும், செயற்கையாகவும் பயிலப்பட்டு வருகிறது பிற கலைகலைப் போல இன்பத்தை அளிப்பதுடன் பகுத்தறிவையும், பண்பாட்டையும் புகட்டும் ஆற்றலுடையது. குழந்தை பிறந்ததும் ஒலிக்கும் ஒலி "அம்மா" என்பதாகும். அதுவே முதற் கல்வியாக அமைகின்றது. தாய் சொல்லிக் கொடுக்கும் அப்பா, அத்தை, அண்ணா, அக்கா, பாப்பா, முதலிய மானுட செயற்கைக் கல்வியின் தொடக்க அத்தியாயங்கள் ஆகும். பெரியபுராண சமதாயத்தில் மாணவர்கள் கல்வி பயிலத்தொடங்கும் முன்பே அறிவிற் சிறந்தவர்களாக விளங்கினார்கள். சும்பந்தர் திருத்தோனிபுரம் என்ற சீர்காழி ஈசனை ஆசிரியனாகக் கொண்டு தோடுடைய செவியன் பிரம்ம புரம் மேவிய இறைவன் என்று இறைவனின் தன்மைகளை வாழ்த்திப்பாடினார். (பெரியபுராணம்.பா.எ.1220) இளங்குழந்தைப் பருவம் கடந்த பிறகு திருநாவுக்கரசருக்கு "மருணிக்கியார்" என்று பெயர் சூட்டி முடி களைந்து கலை பயிற்றுவிக்கத் தொடங்கினார். சிறுத்தொண்டர் தன் மகன் சீராளனை மூன்று வயதில் பள்ளிக்கு அனுப்பினார். மேற்கண்ட சான்றுகளின் வாயிலாக மூன்று வயதிலிருந்தே கல்வி பயின்று வந்த முறையினை அறியமுடிகின்றது.

**கணித நூற்புலமைக் கலை**

கணித நூல்களைக் கற்று மனிதர், பறவை, விலங்கு முதலியவற்றின் இயக்கங்களையும் காலத்தையும் கணித்துப் பலாபலன்களைக் கூறுபவர்களை காலக்கணிதர் என்றும் இக்காலகட்டங்களில் சோதிடர் என்றும் அழைக்கிறோம். இக்கலைகுறித்த செய்திகள் பெரியர்ராணம் எங்கும் பரவிக் கிடக்கின்றன. சுந்தரர் மணக்கோலம் பெறுவதற்காக கணிதர் குறித்த நல்ல நேரத்திற்கு முன் திருமஞ்சன சாலையுட் பகுந்தார். (பெரியபுராணம்.பா.எ.160)) கோச்செங்கட் சோழனின் தாய் கமலவதியார் அவர் கருவுற்றிருந்தபோது ஒரு நாழிகை கழித்துப் பிறந்த குழந்தை அரசாளும் என்று கணிதர் கூறினார். ஆகவே தாயார் தம்மைத் தலைகீழாகக் கட்டித்

தொங்கவிடச் செய்து பின் சோதிடர் குறித்த நேரத்தில் குழந்தையைப் பெற்றெடுத்தார். (பெரியபுராணம்.பா.எ.4205)) மேற்கண்ட சான்றுகள் பெரியபுராணக் காலகட்டத்தில் கணித வல்லுநர்களும் இருந்தமையைப் பலப்படுத்துகிறது

**மருத்துவக்கலை**

மருந்து கொண்டு நோயைக் குணப்படுத்துவது பன்னெடுங்காலமாக வழக்கினில் உள்ளது. மனிதனுக்கும் பிற உயிரினங்களுக்கும் நோயைக் குணப்படுத்தி ஆயுளைத் தருவது மருத்துவம். ஆதனால் தான் இக்கலையை ஆயுள் வேதம் என்றனர். இதுவே இன்று ஆயுர்வேதம் என அழைக்கப்படுகின்றது. அப்பூதி அடிகளாரின் மூத்த மகனும், திருமருகல் வணிகப் பெண்ணின் மாமனும், மயிலாப்பூரில் பூம்பாவையும் பாம்பு தீண்டி இறந்தனர். இவர்களை அப்பர், சம்மந்தர் ஆகியோர் பதிகம் பாடி உயிர்பித்தனர். அப்பர் சமண சமயத்திலிருந்த போது வயிற்று வலியால் துன்புற்றார். அப்போது திலகவதியார் திருநீறு பூசி நோயினைக் குணப்படுத்தினார். கூன்பாண்டியனுக்கு ஏற்ப்பட்ட வெப்பு நோயை சம்பந்தர் நீக்கினார். கோல்லி மழவனின் மகளுக்கு ஏற்பட்ட முயலக நோயும் சம்பந்தரால் தீர்க்கப்பட்டது. மருத்துவக் கலையிலும் பெரியபராணச் சான்றோர்கள் சிறப்பு பெற்று விளங்கியமை புலனாகின்றது.

**மனப்பயிற்சிக்கலை**

பெரியபுராணம் காட்டும் சமுதாயத்தில் உயிர் வளி எனும் பிராண வாயுவை அடக்கவும், அதனால் பல அறச் செயல்களைச் செய்யவும் பயிற்சி பெற்றிருந்தனர். இவ்வாறு மனத்தைப் பக்கவப்படுத்தி, அடக்கியாளும் கலையை இன்று யோகாசனப் பயிற்சி என்கிறோம். இறந்து கிடந்த மூலன் உடலுள் சிவயோகி தாம் பயின்ற மனப்பயிற்சிக் கலைத்திறத்தினால் தம் உயிர் வளியை அடக்கி மூலனடலுக்குள் புகுந்து எழுந்தார். இக்கலை கூடு விட்டுக் கூடு பாய்தல் என அழைக்கப்படுகின்றது. பெருமிழலைக் குறும்பர் கயிலையைச் சுந்தரர் மறுநாள் அடைவார் என்பதறிந்து, தமது மனப்பயிற்சிக் கலையால் சிவபெருமானின் பாதங்களைத் தாம் சுந்தராக்கு முன் சென்றடைய முடியுமெனக் கூறிப் புறப்பட்டார். (பெரியபுராணம்.பா.எ.1714) அறிவு, ஆணவம், மனம் எனும் காரணங்களை ஒன்றாக்கி நல்லறிவை மேற்கொண்டு உயிர் வளியைச் செலுத்திச் செலுத்திக் கபால ஓட்டின் நடுவிற் பொருந்தும்படி பிரணவ மந்திரத்தை ஓதினார். அவ்வழியே மிழலைக் குறும்பர் கயிலாயத்தைச் சுந்தரர் அடையும் முன் சென்றடைந்தார். அதன் மூலம் மனத்தைக் கட்டுப்படுத்தி அருஞ்செயல் புரியும் மனப்பயிற்சிக் கலை உயர்ந்தோங்கியிருந்தது என்பது புலனாகின்றது.

**சமையற்கலை**

சமைத்தல் என்பது பக்குவப்படுத்தலைக் குறிக்கும். சமைதல் என்றால் என்றால் பக்குவமடைதலாகும். உணவுப்பொருள்களைப் பக்குவமாகஆக்குவதைக் குறித்து, அதுவே சமையல் என்று அழைக்கப்படலாயிற்று. பெரியபுராணம் காட்டும் சமுதாயத்தில் காய், கனி, நெல், அரிசி, கிழங்கு, முதலியவற்றால் சமைக்கப்பட்ட உணவையும் இறைச்சி, மீன் முதலியவற்றைக்கொண்டு சமைக்கப்பட்ட உணவையும் காணமுடிகின்றது. திருவெண்காட்டு நங்கை மனித இறைச்சியை உணவாகச் சமைத்தார். தாம் பெற்ற

பிள்ளையைக் கொத்தி அறுத்து மூளையைப் பிரித்துப் பலகாயம் எனும் அரை பொருட்களை அரைத்துத் தாளித்துச் சமைத்தார். அவரின் பணிப் பெண் சந்தனத்தாதி, உடலிறைச்சியுடன் தலைக்கறியையும் பக்குவமாகச் சமைத்தாள். (பெரியபுராணம். பா. எ. 3724, 3725, 1805) இளையான்குடிமாற நாயனாரும், அவர் துணைவியும் நெல்முளைகளை அரிசியாக்கி, குழி நிரம்பாத உயரமற்ற கொல்லைப் புன்செய் நிலத்தில் முளைத்த குறும்பயிர்களின் இலைகளைப் பறித்துக் கறியாக்கிச் சமைத்தார். அரிவாள்தாய நாயனார் நாடொறும் செந்நெல்சோறு, செங்கீரை பசுமையான மாவடு முதலிய சைவ உணவைத் தயார் செய்து இறைவனுக்கு அளித்தார். அப்பூதியடிகள் நாவுக்கரசருக்கு தூய நற்கறிகளில் அறுசுவையின் இனிய அமுதாக்கி இட்டார். பெரியபராணச் சமுதாயத்தில் சமையற்கலை சிறப்புடன் இருந்தமையை அறியமுடிகின்றது.

**போர்க்கலை**

படைக்கலப் பயிற்சி பெறுவது போர்க்கலையாகும். போர் தொடக்கும் முன் யாருடன் எவ்வாறு போரிட எந்தச் சூழலில் தொடுக்க வேண்டும் என்றும் தன்வலியையும் மாற்றான் வலியையும் சரி தூக்கிச் செய்வதே போர்க்கலை என்றும் கூறப்படும். பெரியபராண சமதாயத்தில் போர் செய்வற்குப் போர்க் கலையின் சில முறைகளைப் பயன்படுத்தினர். முதலில் எதிரியைப் போருக்கு அழைத்தனர். போர்க்களத்தில் இரு படைகளும் அணிவகுத்து நின்றன. இடியேறு எதிரெதிர் மோதினால் போல வீரர்கள் கேடயங்களையும் வாளையும் ஏந்திச் சூழ்ந்தனர். கால்களில் வீரக்கழல்களை அணிந்து போருக்குச் சென்றனர். இறந்த வீரர்களின் முகங்கள் உயிருள்ளவை போலத் தெரிந்தன. அவ்வீரர்களின் கண்கள் கொல்லர் உலையில் உள்ள தீத்துண்டங்களைப் போலக் காட்சியளித்தன. பருந்துகளும், கழுகுகளும் உயிர் போகாத வீரர்களின் குடல்களைத் தூக்கிப் பறந்தன. (பெரியபுராணம்.பா.எ.3623,3626)இத்தகைய போர்க்கலக் காட்சிகளைக் காணும்பொழுது போர்க்கலையிலும் அக்கால சான்றோர்கள் சிறப்பு விளங்கியமை புலனாகின்றது.

பெரியபுராணம் காட்டும் சமுதாயத்தில் கலை வாழ்க்கையை இன்பமயமாக்கிற்று என்றும், அது நுண்கலை, பருக்கலை என இரு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தன என்றும் அறியமுடிகின்றது. ஆடல், பாடல், சிற்பம், கட்டடம், ஓவியம், கல்வி, கணிதவியல், மருத்துவம், மனப்பயிற்சி, சமையல், போர் போன்ற கலைகள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தமையை அறியமுடிகின்றது.